RNI-NO: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING
www.malaithanthi.in
மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 61 | மார்ச்.9 2026 திங்கள்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# திரிணமூல் காங்கிரஸின் திமிர்பிடித்த அரசியலை தோற்கடிப்போம்: பிரதமர் மோடி சபதம்

டெல்லி, மார்ச்.9-

“திரிணமூல் காங்கிரஸ் கட்சி குடியரசுத் தலைவர், அரசியலமைப்பு மற்றும் ஜனநாயகக் கொள்கைகளை அவமதித்துள்ளது. திரிணமூல் காங்கிரஸின் திமிர்பிடித்த அரசியல் விரைவில் தோற்கடிக்கப்படும்” என்று பிரதமர் மோடி கூறினார்.

இதுகுறித்து இன்று புது டெல்லியில் நடந்த ஒரு நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் மோடி, “இன்று நாடு மகளிர் தினத்தை கொண்டாடும் வேளையில், மிகவும் வேதனையான ஒன்றைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். நேற்று, திரிணமூல் அரசு குடியரசுத் தலைவரை அவமதித்தது. சந்தால் சமூகத்தின் புனித நிகழ்வில் பங்கேற்க அவர் அங்கு சென்றிருந்தார், ஆனால் திரிணமூல் அரசு, அந்த நிகழ்ச்சியில் பங்கேற்பதற்குப் பதிலாக, நிகழ்வைப் புறக்கணித்தது.

குடியரசுத் தலைவர் முர்மு ஆதிவாசி சமூகத்தை சேர்ந்தவர், சந்தால் சமூகத்தின் மேம்பாட்டுக்காக நிறைய பாடுபட்டுள்ளார். குடியரசுத் தலைவருக்கு நடந்த இந்த சம்பவம் இதயத்தை உடைக்கும் வகையில் இருந்தது. அந்த நிகழ்வுக்கு திரிணமூல் அரசு சரியான ஏற்பாடுகளைச் செய்யவில்லை. இது குடியரசுத் தலைவர், அரசியலமைப்புச் சட்டம் மற்றும் அதன் ஆன்மா மற்றும் நாட்டின் ஜனநாயகக் கொள்கைகளுக்கு ஒரு அவமானம். திரிணமூல் காங்கிரஸ் நாட்டின் தாய்மார்கள் மற்றும் சகோதரிகளை அவமதித்துள்ளது.

இன்று, தேசியத் தலைநகர் டெல்லியில் இருந்து சொல்கிறேன். ஒரு ஆதிவாசியை அவமதிக்கும் திரிணமூல் கட்சியின் அரசியல்



விரைவில் தோற்கடிக்கப்படும். திரிணமூல் காங்கிரஸ் கட்சி திமிர்பிடித்தது. அதிகாரத்தில் மிகவும் திமிர்பிடித்தவர்களும், மது போதையில் இருப்பவர்களும் இறுதியில் அழிக்கப்படுவார்கள் என்பது கவனிக்கத்தக்கது:என்று கூறினார்.

பின்னணி என்ன?: மேற்குவங்கத்தின் கோசாய்பூரில் நேற்று சந்தாலி பழங்குடியினரின் மாநாடு நடைபெற்றது. இதில் பங்கேற்க குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு நேற்று பாக்டோக்ரா விமான நிலையத்தில் தரையிறங்கினார். ஆனால் சிலிகுரி மேயர் கவுதம் தேவ் மட்டுமே விமான நிலையத்தில் குடியரசுத் தலைவருக்கு வரவேற்பு அளித்தார்.

இதன்பிறகு பழங்குடியினர் மாநாட்டில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு பேசியதாவது: அரசு மரபின்படி என்னை வரவேற்க முதல்வரோ, மாநில அமைச்சரோ வந்திருக்க வேண்டும். அவர்கள் வரவில்லை. முதல்வர் மம்தா என் மீது அதிருப்தியில் இருக்கிறாரா? எதுவாக இருந்தாலும் இந்த விவகாரத்தை நான் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

சிலிகுரி அருகேயுள்ள பிதான் நகரில் சந்தாலி பழங்குடியினர் மாநாடு நடைபெறுவதாக இருந்தது. ஆனால் மாநில அரசு திடீரென கோசாய்பூருக்கு மாநாட்டை மாற்றி உள்ளது. இந்த இடம் மிகவும் சிறியது. இதில் பெருந்திரளானோர் பங்கேற்க முடியாது. முதல்வர் மம்தா எனக்கு தங்கை போன்றவர். மாநாடு இடத்தை மாற்றியது ஏன் என்பது குறித்து அவர் விளக்கம் அளிக்க வேண்டும். பழங்குடியின மக்களின் வளர்ச்சிக்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கு வங்க அரசு மேற்கொள்ளவில்லை என்றே கருதுகிறேன். இவ்வாறு முர்மு பேசினார்.

## காதல் திருமணங்கள் பெற்றோர் எதிர்ப்பால் போக்சோ வழக்குகளாக மாறுவது அதிகரிப்பு: உயர் நீதிமன்றம் கவலை

சென்னை, மார்ச்.09-

காதல் திருமணங்கள் பெற்றோர் எதிர்ப் பால் போக்சோ வழக்குகளாக மாறுவது அதிகரித்துள்ளதாகவும், இதனால் இளைஞர்கள் நீண்ட காலம் சிறையில் இருக்க நேரிடுவதும் கவலை அளிப்பதாக, உயர் நீதிமன்றம் மதுரை அமர்வு தெரிவித்துள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலைச் சேர்ந்த மகேஷ் என்பவர். தனது நண்பரின் சகோதரியை காதலித்து திருமணம் செய்துகொண்டார். அப்போது, அவருக்கு வயது 16 என்பதால், மகேஷ் மீது நாகர்கோவில் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

கடந்த 2018 மார்ச் 4ம் தேதி காலை வீட்டை விட்டு வெளியேறிய அந்த பெண். மகேஷுடன் அவரது உறவினர் வீட்டுக்குச் சென்று திருமணம் செய்து கொண்டதாகவும், அதன்பின் அவர் பலமுறை பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டதாகவும் ‘குற்றச்சாட்டு எழுந்தது. இதையடுத்து, நாகர் கோவில் அனைத்து மகளிர் காவல் நிலைய போலீஸார் போக்சோ சட்டத்தில் வழக்குப் பதிவு செய்து மகேஷை கைது செய்தனர்.

இந்த வழக்கை விசாரித்த நாகர்கோவில் போக்சோ சிறப்பு



நீதிமன்றம், மகேஷுக்கு 20 ஆண்டு கடுங்காவல் தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. இந்த தீர்ப்பை எதிர்த்து மகேஷ். உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் மேல் முறையீட்டு மனு தாக்கல் செய்தார். இந்த மனுவை விசாரித்த நீதிபதி மாலா அளித்த தீர்ப்பு: பாதிக்கப்பட்ட பெண்ணின் வயதை நிரூபிப்பதற்காக தாக்கல் செய்யப்பட்ட பிறப்பு சான்றிதழ் மற்றும் மாற்றுச் சான்றிதழ் ஆகியவை அசல் ஆவணங்களாக அல்லாமல் நகல்களாக உள்ளன. அசல் ஆவணங்கள் இருந்தும் தாக்கல் செய்யப்படாத நிலையில், அவற்றை ஆதாரமாக ஏற்க முடியாது.

பாதிக்கப்பட்ட பெண்ணின் வயது நிரூபிக்கப்படாத நிலையில், போக்சோ சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டை ஏற்க முடியாது. அதனடிப்படையில், கீழமை நீதிமன்றம் வழங்கிய தண்டனை ரத்து செய்யப்படுகிறது. அவர் வேறு எந்த வழக்கிலும் தேவைப்படாவிட்டால், உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.

இளம் பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கு இடையிலான ஒப்புதல் காதல் திருமணங்கள். பெற்றோரின் எதிர்ப்பால் பின்னர் போக்சோ வழக்குகளாக மாறும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. இதுபோன்ற வழக்குகளில் இளைஞர்கள் நீண்ட காலம் சிறையில் இருக்க நேரிடுவது கவலை அளிக்கிறது.

போக்சோ சட்டம் குறித்து பொதுமக்கள், குழந் தைகள் மற்றும் பெற்றோருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். இந்த உத்தரவுகளை நிறைவேற்ற எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து, தமிழக அரசின் முதன்மைச் செயலர் அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட்டு, வழக்கை ஜூன் 3ம் தேதிக்கு தள்ளிவைத்து உத்தரவிட்டார்.

## தேர்தலுக்கு முன்னேற்பாடு: 211 துணை ராணுவப் படையினர் சென்னை வருகை

சென்னை, மார்ச்.09-

தமிழக சட்டப் பேரவைத் தேர்தல் முன்னேற்பாடாக 211 துணை ராணுவப்படையினர் நேற்று சென்னை வந்தனர். அவர்கள் தங்குவதற்காக சென்னை மாநகராட்சி திருமண மண்டப முன்பதிவுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் விரைவில் அறிவிக்கப்பட உள்ளது. இதற்காக செய்யப்பட்டுள்ள முன்னேற்பாடுகளை கடந்த பிப்.26ம் தேதி தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் தமிழகத்துக்கு நேரில் வந்து, மாவட்ட ஆட்சியர்கள், எஸ்பிக்கள், ஐஜிக்கள், தலைமைச் செயலர், டிஜிபி, ஐடி, ஈடி அதிகாரிகள், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக், ஏற்கெனவே தமிழகத்தில் உள்ள 234 தொகுதிக்கும் தேர்தல் நடத்தும் அலுவலர்களை நியமித்த நிலையில், நேற்று முன்தினம் அவர்களுக்கும், தகவல் தொழில்நுட்ப உதவிப் பணியாளர் களுக்கும், தேர்தல் ஆணைய செயலிகளான இசிஐ நெட் (ECINET), இடிப்பிபிஎம்எஸ் (ETPBMS) பயன்பாடுகள், தேர்தல் நடத்தை விதிகள் கண்காணிப்பு, கட்டணச் செய்தி கண்காணிப்பு உள்ளிட்ட பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

ஏற்கெனவே, தமிழக சட்டப்பேரவை பொதுத் தேர்தலை அமைதியாக நடத்தவும், தேர்தல் பாதுகாப்பாக நடத்தப்படுகிறது என்ற நம்பிக்கையை பொதுமக்களுக்கு ஏற்படுத்தும் வகையிலும், முதற்கட்டமாக துணை ராணுவப் படையின் 50 கம்பெனிகள் தமிழகத்துக்கு அனுப்பப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்திருந்தது.

அதனடிப்படையில், நேற்று 211 துணை ராணுவப் படையினர் சென்னை வந்தடைந்தனர். அவர்கள் சென்னையில் பல்வேறு பகுதிகளில் உள்ள மாநகராட்சி திருமண மண்டபங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். வரும் நாட்களில் தொடர்ந்து துணை ராணுவப்படையின் 50 கம்பெனிகளும் வரவு ள்ளன. அப்படையினர் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கு பிரித்து அனுப்பப்பட உள்ளனர்.

இதற்கிடையே, சென்னை மாநகராட்சி வசம் 55 திருமண மண்டபங்கள் பராமரிக்க ப்பட்டு வருகி ன்றன. தேர்தலின்போது பாதுகாப்பு பணியில் ஈடுபடும் துணை ராணுவப் படையினர் தங்குவதற்காக இந்த மண்டலங்கள் பயன்படுத்தப்பட உள்ளன.

அதனால் இந்த 55 திருமண மண்டபங்களின் முன்பதிவு, கடந்த பிப்.26 முதல் ஜூன் 15ம் தேதி வரை முன்பதிவு நிறுத்தப்பட்டுள்ளது. தேர்தல் நடத்தை விதிகள் முடிவுக்கு வந்த பிறகு, மீண்டும் முன்பதிவு தொடங்கும் என மாநகராட்சி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதே போன்று தமிழகத்தின் பிற மாநகராட்சிகளின் பராமரிப்பில் உள்ள திருமண மண்டபங்களிலும் முன்பதிவு நிறுத்தப்பட்டுள்ளது.

## கூட்டணி வாய்ப்புகளை கோட்டை விட்ட தவெக: ஆதவ் மீது ஆதங்கத்தைக் கொட்டிய விஜய்

சென்னை, மார்ச்.09-

தவெகவை நெருங்கி வந்த கட்சிகளுடன் கூட்டணியை பேசி முடிக்காமல், முறுக்கி கொண்டிருந்த ஆதவ் அர்ஜுனா மீது அதன் தலைவர் விஜய் அதிருப்தியில் இருப்பதாக பனையூர் வட்டாரங்கள் சொல்கின்றன.

பலமான கூட்டணியை கட்டமைக்க வேண்டும் என்பதற்காகவே ஆரம்பத்திலேயே, “ஆட்சியில் பங்கு” என்ற அஸ்திரத்தை எடுத்து வீசினார் விஜய். அவரின் இந்த உத்தியானது பல கட்சிகளுக்கும் சபலத்தை உண்டாக்கியது.

முக்கியமாக, காங்கிரஸ் கட்சியானது விஜய்யை ஆயுதமாகப் பயன்படுத்தி கிட்டத்தட்ட திமுகவை மிரட்டவே ஆரம்பித்தது. தவெகவுடன் கூட்டணிக்கு வரும் கட்சிகளை பனையூருக்கு கொண்டு வந்து சேர்க்கும் பொறுப்பை தேர்தல் பிரச்சார மேலாண்மைப் பொதுச் செயலாளரான ஆதவ் அர்ஜுனாவிடம் ஒப்படைத்தார் விஜய். அது மாத்திரமல்லாது, மற்ற கட்சிகளில் இருக்கும் முக்கிய தலைகளை தவெக பக்கம் தள்ளிக் கொண்டு வரும் பொறுப்பையும் ஆதவ்விடமே ஒப்படைத்தார். அப்படித்தான் முதல் விக்கெட்டாக செங்கோட்டையனை



உள்ளே இழுத்துப் போட்டார் ஆதவ்.

ஆனால், பிற கட்சி பிரபலங்களை தவெகவுக்கு இழுத்து வரும் விஷயத்தில் காட்டிய அக்கறையை கட்சிகளை கூட்டணிக்குள் கொண்டுவரும் விஷயத்தில் ஆதவ் காட்டவில்லை. தனது ‘வாய்ஸ் ஆஃப் காமன்ஸ்’ அமைப்பு எடுத்துக் கொடுத்த புள்ளி விவரங்களை மட்டுமே நம்பிக் கொண்டு கூட்டணிக்கு காத்திருந்த கட்சிகளை ஆதவ் கண்டுகொள்ளவில்லை என்கிறார்கள்.

நவம்பர் வரை தவெகவுக்கு சிக்னல் கொடுத்துக் கொண்டிருந்த டிடிவி. தினகரனுக்கு பனையூர் பக்கமிருந்து எந்த பதிலும் இல்லை. செங்கோட்டையன் மூலமாக தூதுவிட்ட போதும் விஜய் தரப்பிலிருந்து தினகரனுடன் யாரும் பேச்சுவார்த்தை நடத்த முன்வரவில்லை. இதனால் அதிருப்தியடைந்த தினகரன், “ஜெயலலிதா போன்ற சீனியர்களை பார்த்த நான், நேற்று அரசியலுக்கு வந்த ஜூனியர்களிடம் நானாகப் போய் பேச வேண்டுமா?” எனக் கொதித்திருக்கிறார். இது தெரியாமல், “புத்தாண்டுக்குப் பிறகு தினகரன் நமது கூட்டணிக்கு வருகிறார்” என விஜய்யை நம்ப வைத்துக் கொண்டிருந்தார் ஆதவ்.

இதேபோல் விஜய்யை ”எங்க வீட்டுப் பிள்ளை” என்று சொல்லிக் கொண்டிருந்த பிரேமலதாவையும் தவெக சரியாக அணுகவில்லை. தவெக கூட்டணி தொடர்பாக என்.ஆனந்த் தரப்பில் நம்பகமான பதில் வராததால் ஆதவ் அர்ஜுனாவிடம் பேசினார் சுதீஷ். அவரும், “பொங்கலுக்குப் பிறகு பேசுவோம்” எனச் சொல்லிவைக்க, சத்தமே இல்லாமல் தேமுதிகவை தங்கள் பக்கம் இழுத்துப் போட்டுவிட்டது திமுக.

இன்னொரு பக்கம் மனோஜ் பாண்டியன், வைத்திலிங்கம், ஓபிஎஸ் உள்ளிட்டோருக்கும் தவெக தான் முதல் சாய்ஸாக இருந்தது. ஆனால் அங்கே, முன்னவர் செங்கோட்டையனுக்கு தரப்பட்ட ‘மரியாதைகளை’ பார்த்துவிட்டு அவர்களும் திமுக பக்கமே திரும்பிவிட்டார்கள். இப்போதே அமைச்சராகிவிட்ட தோரணையில் அதிகாரம் காட்டும் ஆதவ் அர்ஜுனாவும் இந்த விஷயத்தில் சிறு துரும்பையும் கிள்ளிப் போடவில்லை.

இப்படி எதிர்பார்த்திருந்த அனைவருமே திமுக பக்கம் சென்றுவிட்ட நிலையில், கடைசி கட்டமாக விஜய் காங்கிரஸை பெரிதும் நம்பினார். பிரவீன் சக்கரவர்த்தி அவரை நேரில் சந்தித்துப் பேசி, காங்கிரஸ் தலைமையிடம் நேரடியாகப் பேசுமாறு வழிகாட்டினார். ஆனால் அவரோ, அந்தப் பொறுப்பையும் ஆதவ்விடமே ஒப்படைத்தார். இதனிடையே, திமுகவின் கெடுபிடியான பேச்சுவார்த்தைகளை பிடிக்காத கிரிஷ் சோடங்கரும் தவெக தரப்பை அணுக முயற்சித்தார்.

ஆனால், அதிகார பூர்வமாக பேச்சுவார்த்தைக்கு குழுவை நியமிக்காமல் திரைமறைவில் பேச்சுவார்த்தை நடத்தியதை அவர் ரசிக்கவில்லை. அதேசமயம் ஆதவ் அர்ஜுனா செல்வப்பெருந்தகை போன்ற தமிழக காங்கிரஸாரை நம்பாமல் கே.சி.வேணுகோபால் மூலம் ராகுல் காந்திக்கு தூது அனுப்பினார். ராகுல் காந்தியோ, ஆதவ்வை நேரடியாகச் சந்திக்காமல் தனது சகாக்கள் மூலமாகவே பேச்சுவார்த்தை நடத்த நினைத்தார்.

காங்கிரஸ் திமுக பக்கம் செல்வதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னதாக ஹைதராபாத் வந்த ராகுல் காந்தியை சந்திக்க ஆதவ் அர்ஜுனா பெரிதும் முயற்சித்தார். ஆனால், தமிழக காங்கிரஸ் எம்எல்ஏக்களில் 15 பேர், திமுகவுடன் கூட்டணி வைக்க வேண்டும் எனச் சொல்லிவிட்டதால் ராகுல் ஆதவ்வை சந்திக்கவில்லை. கடைசியில் காங்கிரஸும் தங்கள் கையை விட்டுப் போனதால் விஜய் ரொம்பவே அப்செட்டாகிப் போனார்.

இதையடுத்து, “கூட்டணிக்கு காத்திருந்த கட்சிகளுடன் உரிய முறையில் பேசி முடிக்காமல் இப்படி நமக்கு இருந்த வாய்ப்புகள் அனைத்தையும் கோட்டை விட்டுவிட்டீர்களே” என விஜய் ஆதவ் அர்ஜுனாவிடம் தனது அதிருப் தியை கொஞ்சம் சத்தமாகவே வெளிப்படுத்தியதாகச் சொல்கிறார்கள் தவெக முக்கிய புள்ளிகள்.

## “7 வயது சிறுமிக்கு பாதுகாப்பில்லை; திமுக ஆட்சிக்கு வெற்று விளம்பரம் ஒரு கேடா?” -பழனிசாமி

சென்னை, மார்ச்.09-

‘நாமக்கல் குமாரபாளையத்தில் தெருவில் விளையாடிக் கொண்டிருந்த 7 வயது சிறுமி பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட அதிர்ச்சி செய்தி வந்துள்ளது. 7 வயது சிறுமிக்கு தெருவில் பாதுகாப்பு இல்லாத ஆட்சிக்கு, ‘வெல்லும் தமிழ்ப் பெண்கள்’ என்ற வெற்று விளம்பரம் ஒரு கேடா?’ என அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், ‘நாமக்கல் மாவட்டம், குமாரபாளையத்தில் தெருவில் விளையாடிக் கொண்டிருந்த 7 வயது சிறுமி பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு, உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாக, உலக மகளிர் தினம் ஆன இன்று, அதிர்ச்சி அளிக்கும் செய்தி வந்துள்ளது.

ஸ்டாலின் அரசின் ஒட்டுமொத்த நிர்வாகச் சீர்கேட்டால், சிறுமி முதல் மூதாட்டி வரை யாருக்கும் எங்கும் பாதுகாப்பு இல்லை. இப்படி ஒரு கேவலமான ஆட்சிக்கு பொறுப்பான நீங்கள், எந்த முகத்தை வைத்துக் கொண்டு மக்களிடம் இன்னொரு முறை ஆட்சி செய்ய கேட்கிறீர்கள் மு.க.ஸ்டாலின் அவர்களே?

ஒரு 7 வயது சிறுமிக்கு தெருவில் பாதுகாப்பு இல்லாத ஆட்சிக்கு, “வெல்லும் தமிழ்ப் பெண்கள்” என்ற வெற்று விளம்பரம் ஒரு கேடா?. குமாரபாளையம் சிறுமி பாலியல் வன்கொடுமை வழக்கில் குற்றவாளி மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கவும், அப்பச்சிளம் குழந்தைக்கு முறையான சிகிச்சை அளிக்கவும், ஸ்டாலின் மாடல் திமுக அரசை வலியுறுத்துகிறேன்’ எனத் தெரிவித்தார்.



# புதுச்சேரி முதல்வர் ஒலிம்பியன்ஸ் குளோபல் ரெக்கார்ட்ஸ் லோகோவை வெளியிட்டார்

புதுச்சேரி மார்ச் 09-

புதுச்சேரி முதல்வர் ழி. ரங்கசாமி இல்லத்தில் (05.03.2026, வியாழக்கிழமை) மாலை நடைபெற்ற சிறப்பு விழாவில், 'ஒலிம்பியன்ஸ் குளோபல் ரெக்கார்ட்ஸ்' (Olympians Global Records) அமைப்பின் அதிகாரப்பூர்வ லோகோ அறிமுகப்படுத்தப்பட்டது.

விழா சிறப்பம்சங்கள்:நிகழ்ச்சியில் கலந்துகொண்ட முதல்வர், லோகோவை அறிமுகம் செய்து வைத்து, நிர்வாகிகளுக்குத் தனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்தார். மேலும், இவ்விழாவின் ஒரு பகுதியாக புத்தாஸ் வீரக் கலைகள் மற்றும் சாய் மகில் அகாடமி ஆகிய அமைப்புகளின் லோகோக்களையும் அவர் வெளியிட்டார்.

பல்வேறு பகுதிகளில் இருந்து வருகை தந்திருந்த புத்தாஸ் வீரக் கலைகள் பயிலும் மாணவ, மாணவிகளைப் பாராட்டிய முதல்வர், அவர்கள் மென்மேலும் பல உலக சாதனைகளைப் படைக்க வேண்டும் என ஊக்கப்படுத்தினார். பங்கேற்பாளர்கள்:இந்த விழாவிற்கான ஏற்பாடுகளை ஒலிம்பியன்ஸ் குளோபல் ரெக்கார்ட்ஸ் நிர்வாகிகள் சிறப்பாகச் செய்திருந்தனர்: * தலைவர்: பிரீத்த முருகேசன் * செயலாளர்: ஸ்ருதி புவனேஷ் * பொருளாளர்: ஸ்ரீதேவி கார்த்திகேயன்மேலும், அமைப்பின் உறுப்பினர்கள் சாய் அங்கயற்கன்னி, நித்யா ஆகியோர் முன்னிலை வகித்தனர். கௌரவ விருந்தினர்களாக புதுக்கோட்டை சிட்டி ரோட்டரி சங்கத்தின் தலைவர் குட்லக் முஹம்மது அப்துல்லா, செயலாளர் சங்கர் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.நிகழ்ச்சியின் தொடக்கத்தில் சேது கார்த்திகேயன் வரவேற்புரை ஆற்றினார். விழாவின் நிறைவாக புவனேஷ் நன்றியுரை வழங்கினார்.

# வானராங்குடி , அரசு தொடக்கப் பள்ளியின் 101 வது ஆண்டு தொடக்க விழா



தஞ்சாவூர் மார்ச். 9-

திருக்காட்டுப்பள்ளி அருகே வானரங்குடி அரசு பள்ளி ஆண்டு விழா பள்ளியின் முன்னாள் மாணவரும் ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதியுமான திரு.ம.ராஜேந்திரன் தலைமையில் வெகுவிமர்சையாக நடைபெற்றது. விழாவில் முன்னாள் மாணவர்களும் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்களும் அரசு அதிகாரிகளும் கலந்து கொண்ட நிகழ்வில் உதவிஆசிரியர் ஹரிகிருஷ்ணன் வரவேற்புரையாற்ற பள்ளியின் தலைமை ஆசிரியர் வாசுகி ஆண்டறிக்கை வாசித்ததோடு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசு வழங்கி பாராட்டியதோடு மாணவர்களின் கண்கவர் கலைநிகழ்ச்சிகள் நடத்தி பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் கீதா நன்றியுரையுடன் விழா நிறைவுற்றது.

பள்ளி ஆண்டு விழாவில் ஓய்வு பெற்ற உதவி ஆசிரியர் இளங்கோவன் மற்றும் அங்கன்வாடி அமைப்பாளர் வளர்மதி ஆகியோருக்கு பாராட்டு விழாவும் நடைபெற்றது.




# திருப்பூர் மாவட்டம் தாராபுரம் நகராட்சியில் மகளிர் தினத்தை முன்னிட்டு பெண் தூய்மை பணியாளர்களுக்கு சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது

திருப்பூர், மார்ச.9-

திருப்பூர் நகராட்சி தலைவர் பாப்பு கண்ணன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நகராட்சியில் பணியாற்றும் சுமார் 120 பெண் தூய்மை பணியாளர்களுக்கு கேக் வெட்டி மகளிர் தின வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அவர்களுக்கு நினைவு பரிசுகள் வழங்கி, நகரத்தின் தூய்மையை காக்க அவர்கள் ஆற்றும் சேவையை பாராட்டினர். நிகழ்ச்சியில் நகராட்சி கவுன்சிலரும் திமுக நகரச் செயலாளர் முருகானந்தம் மற்றும்

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட மகளிர் அணி தலைவர் சரஸ்வதி ராஜேந்திரன் மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் சசிகலா தில்லை முத்து மாவட்ட மகளிர் மகளிர் அணி துணைத்தலைவர் அருக்காணி ராமசாமி ஆகியோர்,

அடுத்து மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் திருமதி ஆனந்தி அவர்கள் மாவட்ட துணை செயலாளர் பிரபாவதி பெரியசாமி நகர நகர மகளிர் அணி அமைப்பாளர் புனிதா சக்திவேல் நகரத் துணைச் செயலாளர் செலின் பிலோமினா நகரத் தொண்டர் அணி அமைப்பாளர் முத்துலட்சுமி மற்றும் கவுன்சிலர்கள் தேவி அபிராமி ராஜாத்தி மருத்துவர் அணி தலைவர் இந்திராணி நகர துணை அமைப்பாளர்கள் சந்திரா உமா..



# மக்கள் நல்வாழ்வு சமூக பாதுகாப்பு அமைப்பின் சார்பில் மகளிர் தினத்தை முன்னிட்டு விருது வழங்கும் விழா

திருச்சி மார்ச். 09-

திருச்சி மாவட்டம் திருவரம்பூர் தாலுக்கா அண்ணா வளைவில் உள்ள ஏ ஆர் எஸ் திருமண மஹால் பெண்களுக்கு வீர மங்கை விருதும் ஆண்களுக்கு சமூக சேவகர் விருதும் வழங்கப்பட்டன இதில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அன்பில் பொய்யாமொழி துவாக்குடி நகர மன்ற தலைவர் காயாம்பு சார் அவர்களும் கலந்துகொண்டு

நிறுவனத் தலைவர் ராஜேஷ் நிறுவன பொதுச் செயலாளர் கிஆதிலெட்சுமி ஆனந்தராஜ் மாநில ஆலோசகர் ராமன் மாநில பொருளாளர் பானுமதி மாநில மகளிர் அணி தலைவர் காந்திமதி மாநில துணைத் தலைவர் தமிழ் இலக்கியா மாநில மகளிர் அணி ஆலோசகர் சுமதி மாநில மகளிர் அணி துணை ஆலோசகர் ஈஸ்வரி மாநில மகளிர் அணி துணைத் தலைவர் ஜெயராணி மாநில மகளிர் துணைச் செயலாளர் தஸ்லின் மாநில இளைஞரணி துணை ஒருங்கிணைப்பாளர் ராமன் மாநில இளைஞர் அணி துணை ஒருங்கிணைப்பாளர் ராஜ்குமார் துணை ஒருங்கிணைப்பாளர் ராமன் மாநில மகளிர் அணி துணை ஒருங்கிணைப்பாளர் ராஜேஸ்வரி

லீமா சபரி அம்மாள்

மரிய ஜோன்ஸ் திருப்பூர் மாவட்ட மகளிர் அணி தலைவர் ஜெயமுருகன் திருச்சி மாவட்ட இளைஞர் அணி தலைவர் சரவணன் திருச்சி மாவட்ட செயலாளர் கிருஷ்ணவேணி திருச்சி மாவட்ட துணைத் தலைவர் மல்லீஸ்வரி திருச்சி மாவட்ட பொருளாளர் கிறிஸ்டி திருச்சி மாவட்ட மகளிர் செயலாளர் ரேவதி திருச்சி மாவட்ட மகளிர் அணி துணைச் செயலாளர் யாஸ்மின் திருச்சி மாவட்ட மகளிர் திருச்சி அணி ஆலோசகர் செல்வி திருச்சி மாவட்ட இளைஞரணி ஒருங்கிணைப்பாளர் சஞ்சய் மகளிர் அணி ஒருங்கிணைப்பாளர் பழனியம்மாள் அமைப்பின் பொறுப்பாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் மற்றும் விருது வாங்கியவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்..





■ நேற்றைய தினம்,தாராபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் எஸ். வி. செந்தில்குமார் மற்றும் தாராபுரம் மேற்கு ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் சன் பாலு அவர்களின் முன்னிலையில் தமிழக வெற்றி கழகத்தை சேர்ந்த லோகேஷ் பாபு, பாரதிய ஜனதா கட்சியை சேர்ந்த கிருபாகரன், ஓபிஎஸ் அணியை சேர்ந்த குகன் மற்றும் அஜய், புகழ் மணி ஆகியோர் தாய் கழகமான திராவிட முன்னேற்றக் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.உடன் ஊராட்சி கணேஷ், திருமலைபாளையம் செல்வம், திருமலைபாளையம் இளைஞர் அணி அமைப்பாளர் கனகராஜ் ஆகியோர் பங்கேற்றனர்... மேலும் இதனை எடுத்து பல்வேறு கட்சிகளில் இருந்து இளைஞர்கள் தாய் கழகமான திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைய உள்ளனர்.



# பன்னி அள்ளி புதூரில் பகுதி நேர ரேஷன் கடை முழுநேர கடையாக மாற்றம் - மதியழகன் எம்எல்ஏ திறந்து வைத்தார்

கிருஷ்ணகிரி, மார்ச் .9-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் ஒன்றியத்திற்கு உட்பட்ட பன்னி அள்ளி புதூரில் இயங்கி வந்த ரி.ரி.106 காவேரிப்பட்டினம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் பகுதி நேர ரேஷன் கடை, பொதுமக்களின் நீண்டநாள் கோரிக்கையை முன்னிட்டு முழுநேர ரேஷன் கடையாக மாற்றப்பட்டது. இதனை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் எம்எல்ஏ அவர்கள் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.

இந்தப் பகுதியில் அதிகமான குடும்ப அட்டைகள் உள்ளதால், மக்கள் ரேஷன் பொருட்களை பெற சிரமம் ஏற்பட்டது. இதனை கருத்தில் கொண்டு, அரசின் அனுமதியுடன் பகுதி நேர ரேஷன் கடை முழுநேர ரேஷன் கடையாக மாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. இதனால் பன்னி அள்ளி புதூர் மற்றும் சுற்றுவட்டார கிராம மக்கள் இனி தினசரி நேரங்களில் சுலபமாக ரேஷன் பொருட்களை பெற முடியும்.

இந்த சேவை கிடைக்க தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டதாக கூறி, அப்பகுதி கிராம மக்கள் தமிழக அரசுக்கும் முதலமைச்சருக்கும் நன்றி தெரிவித்தனர்.

இந்த நிகழ்ச்சியில் மத்திய ஒன்றிய செயலாளர்கள் தேங்காய் சுப்பிரமணி, சரவணன், மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் சீனிவாசன், பொதுக்குழு உறுப்பினர் நாகராஜ், மாவட்ட துணைச் செயலாளர் கோவிந்தசாமி, மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் சபரி, மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் மணி விஜயன், இளைஞர் அணி துணை அமைப்பாளர் குமார், மாவட்ட இலக்கிய அணி துணைத் தலைவர் செல்வம், மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் சின்ன பையன், கிளை செயலாளர்கள் வேலு, தேவன், பாலாஜி, சிவா உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.




# குரோம்பேட்டையில் மனிதநேய மக்கள் கட்சி சார்பில் இஃப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி

குரோம்பேட்டை, மார்ச்.9-

செங்கல்பட்டு மாவட்டம் குரோம்பேட்டையில் மனிதநேய மக்கள் கட்சி சார்பில் இஃப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி பல்லாவரம் தெற்கு பகுதி தலைவர் அப்துல் அஜிஸ் தலைமையில், கிளைத் தலைவர் ரஜபூதீன், வரவேற்புரையில், மாநில செயற்குழு உறுப்பினர் சிந்தா மதார் மற்றும் பகுதி செயலாளர் சாதிக் ரப், பகுதி பொருளாளர் சையது முகமது, பகுதி துணை செயலாளர் செய்யது நவாபுதீன் மற்றும் அப்துல் ரகுமான் சுல்தான் முகமது ரபிக் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக மனிதநேய மக்கள் கட்சியின் மாநில துனைப் பொதுசெயலாளரும், மாமன்ற உறுப்பினருமான தாம்பரம் எம்.யாக்கூப், பல்லாவரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி கலந்து கொண்டு இஃப்தார் நோன்பு குறித்து சிறப்புரையாற்றினர்.

இதில் வடக்கு மாவட்ட தலைவர் எஸ் கே ஜாகிர் உசேன், காயிதே மில்லத் நினைவு ஜும்மா பள்ளி வாசல் நிர்வாகிகள், திமுக நிர்வாகிகள், விசிக நிர்வாகிகள் உட்பட ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர் , நிகழ்ச்சி இறுதியில் மனிதநேய மக்கள் கட்சி பகுதி செயலாளர் தமீம் அன்சாரி நன்றியுரை ஆற்றினார்

# உயிரைப் பறிக்கக் காத்திருக்கும் மரணக்குழி: போகலூர் மஞ்சகொல்லை சாலை துண்டிப்பு!



இராமநாதபுரம் மார்ச் 09-

இராமநாதபுரம் மாவட்டம், போகலூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட காமன்கோட்டை மற்றும் மஞ்சகொல்லை கிராமங்களை இணைக்கும் முக்கியச் சாலை, கடந்த நான்கு மாதங்களாகப் பெரும் பள்ளம் ஏற்பட்டு மரணப் பிடியில் சிக்கியுள்ளது. அரசு அதிகாரிகளின் அலட்சியத்தால் எந்த நேரத்திலும் உயிர்ச் சேதம் ஏற்படக்கூடும் என அப்பகுதி மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர். நிலவரம் என்ன?ஊரக வளர்ச்சித்துறையின் கீழ் உள்ள இந்தச் சாலையில், தற்போது 4 அடி அகலமும், 8 அடி ஆழமும் கொண்ட மிகப்பெரிய பள்ளம் உருவாகியுள்ளது. சாலையின் பெரும் பகுதி முழுமையாக உடைந்து விழும் நிலையில் இருப்பதால், போக்குவரத்து முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது. ஆபத்தில் பள்ளிச் சிறுவர்களும் பொது மக்களும்: பள்ளி வாகனங்கள்: தினமும் ஏராளமான பள்ளிப் பேருந்துகள் மற்றும் குழந்தைகள் இந்த ஆபத்தான பகுதியைக் கடந்து செல்கின்றனர். * அரசுப் பேருந்துகள்: கனரக வாகனங்கள் மற்றும் அரசுப் பேருந்துகள் இப்பள்ளத்தின் ஓரமாகவே மிகவும் அபாயகரமான முறையில் இயக்கப்படுகின்றன. * இரவு நேர விபத்துக்கள்: போதிய மின்விளக்கு வசதியோ அல்லது எச்சரிக்கை பலகைகளோ இல்லாததால், இரவு நேரங்களில் இந்தப் பள்ளம் இருப்பது தெரியாமல் வாகன ஓட்டிகள் விபத்துக்குள்ளாகும் அவலம் தொடர்கிறது.

அதிகாரிகளின் அலட்சியம்:இது குறித்து இப்பகுதி மக்கள் பலமுறை புகார் அளித்தும், போகலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அதிகாரிகள் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. நான்கு மாதங்களாக இந்த அவல நிலை நீடிப்பது அதிகாரிகளின் மெத்தனப் போக்கையே காட்டுவதாக சமூக ஆர்வலர்கள் குற்றம் சாட்டுகின்றனர். பொதுமக்கள் கோரிக்கை:

"ஒரு பெரிய உயிர்ச் சேதம் ஏற்பட்ட பிறகுதான் அதிகாரிகள் விழித்துக் கொள்வார்களா?" என ஆவேசப்படும் கிராம மக்கள், உடனடியாக இந்தச் சாலையைத் தரமான முறையில் சீரமைக்க வேண்டும் என மாவட்ட நிர்வாகத்திற்கு கோரிக்கை விடுத்துள்ளனர். #நம்மசாலை திட்டத்தின் கீழ் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாகும்.

# பிரத்யங்கிரா தேவிக்கு ஏன் மிளகாய் யாகம் செய்கிறார்கள் தெரியுமா?



நரசிம்மரின் பெண் வடிவமாகவும், உக்கிர தெய்வமாகவும் கருதப்படுபவள் பிரத்யங்கிரா தேவி. பலருக்குள் அதிகம் தெரியாத தேவியாக பிரத்யங்கிரா தேவி விளங்குகிறாள். இந்த தேவியை அமாவாசை நாளில் வழிபடுவது சிறப்பு. இந்த தேவிக்கு மிளகாயால் யாகம் செய்வது வழக்கம். இந்த யாகம் எதற்காக செய்யப்படுகிறது, இதனால் என்ன பலன் கிடைக்கும் என்ற காரணத்தையும், பிரத்யங்கிரா தேவி என்பவள் யார் என்பதையும் தெரிந்து கொள்ளலாம்.

எத்தனையோ தெய்வங்கள் இருந்தாலும் அவற்றில் அச்சத்தையும், ஆவேசத்தையும், அன்பையும் ஒருங்கே தரும் தெய்வமாக விளங்குபவள், அன்னை பிரத்யங்கிரா. காளியை போன்று இவள் உக்கிர தெய்வம் என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால் வேறு எந்த தெய்வத்திற்கும் இல்லாத வகையில், பிரத்யங்கிரா தேவிக்கு மட்டும் மிளகாய் வைத்து யாகம் செய்யப்படும். இந்த யாகத்தில் மூட்டை மூட்டையாக மிளகாய் கொட்டப்பட்டாலும் அதனால் நெடி எதுவும் ஏற்படுவது கிடையாது என்பது தான் அதிசயம்.

புராணக் கதைகளின் படி, அசுரனை அழிக்க நரசிம்ம அவதாரம் எடுத்த நரசிம்மர், அசுரனை அழித்தபின் அவருள் பரவிய கொடிய உக்கிர சக்தி உலகையே அச்சுறுத்தியது. அப்போது பரமசிவன் சரபேஸ்வரர் எனும் அவதாரம் எடுத்து நரசிம்மரின் ஆவேசத்தை அடக்கினார். அந்த சரபேஸ்வரரின் நெற்றிக் கண்ணிலிருந்து எழுந்த தீப்பொறியில் இருந்து தோன்றியவள் தான் அன்னை பிரத்யங்கிரா. அவள் நரசிம்மரின் உக்கிரத்தை விழுங்கி, பின்னர் அவரை புனிதமாக வெளிப்படுத்தினாள் எனக் கூறப்படுகிறது. அதனால் தான் பிரத்யங்கிரா, தீமையை விழுங்கும் தெய்வம், துன்பங்களைச் சுட்டெரிக்கும் சக்தி என அனைவராலும் போற்றப்படுகிறாள்.

இரண்யகசபுவை வதம் செய்வதற்காக தோன்றிய நரசிம்மரின் உக்கிரத்தை கணிக்க சிவன், பிரம்மா, விஷ்ணு, சரஸ்வதி, பார்வதி, லட்சுமி என அனைத்து தெய்வங்களும் தங்களின் சக்தியை நரசிம்மரின் உடலுக்குள் அனுப்பின. அப்படி அனைத்து தெய்வங்களின் சக்திகளும் ஒன்றான வடிவமாகவும் பிரத்யங்கிரா தேவி கருதப்படுகிறாள்.

மனித உடலும் சிம்ம முகமும் கொண்ட பிரத்ய ங்கிரா தேவிக்கு நரசிம்மிகா, அதர்வன பத்ரகாளி உள்ளிட்ட பல பெயர்கள் உள்ளன. சிவன் மற்றும் சக்தியின் ஆற்றல்கள் இணைந்த வடிவமாக பிரத்யங்கிரா தேவி கருதப்படுகிறாள். பிரத்யங்கிரா தேவிக்கு தமிழகத்தில் கும்பகோணம் மாவட்டம் அய்யாவாடி, சென்னை சோழிங்கநல்லூர், மதுரை ஒத்தக்கடை, ஓசூர் மோரனப்பள்ளி, புதுச்சேரி விழுப்புரம் சாலையில் அமைந்துள்ள மொரட் டாண்டி ஆகிய இடங்களில் கோவில் உள்ளது. அமாவாசை, பௌர்ணமி நாட்களில் விசேஷ பூஜைகள், யாகங்கள் நடத்தப்படுகின்றன.

மிளகாய் யாகத்தின் அதிசயம் :

பிரத்யங்கிரா தேவி ஆலயத்தில் மிகப் பிரபலமான வழிபாடு, மிளகாய் யாகம். இதற்கு நிகும்பலா யாகம் என்று பெயர். அமாவாசை நாளில் காலை முதலே பக்தர்கள் வரிசையாக வந்து, காய்ந்த மிளகாய், மிளகு, தங்கள் குறைகளை எழுதிய சிறிய தாள்கள் இவற்றை யாகக் குண்டத்தில் அர்ப்பணிக்கின்றனர். பூசாரிகள் காயத்ரி மந்திரம், ஸ்தோத்திரங்கள் ஜபிக்க, மிளகாய்கள் கிலோகணக்கில் யாகத்தில் கொட்டப்படுகின்றன. இதில் அதிசயம் என்னவென்றால், அவ்வளவு மிளகாய் எரிந்தும், அங்கு மிளகாய் நெடி எழாமல் இருப்பதை பக்தர்கள் தெய்வ அற்புதமாகக் கருதுகின்றனர். நெருப்பில் மிகாயை போடும் போது அது வெடித்து, கருகுவதை போல் தங்களின் துன்பங்களும், குறைகளும் வெடித்து சிதறி, தீயில் எரிந்து சாம்பலாகி விடும் என்பது பக்தர்களின் நம்பிக்கையாக உள்ளது. இது எதிரிகளை பலம் இழக்க செய்யும் என சொல்லப்படுகிறது.இந்த யாகம் உக்கிரமான வழிபாடாக கருதப்படுகிறது.

பக்தர்கள் நம்பிக்கையின் படி, மிளகாய் யாகம் செய்து வேண்டிக் கொண்டால் காரியத் தடைகள் நீங்கும், பில்லி, சூனியம், ஏவல், கண் திருஷ்டி நீங்கும். நீண்ட நாள் நோய்கள் குணமாகும், திருமணத் தடை விலகும், குழந்தைப் பாக்கியம் கிட்டும் என சொல்லப்படுகிறது. பல தொழிலதிபர்கள், அரசியல் தலைவர்கள், வழக்குகளில் சிக்கியவர்கள், மற்றவர்களால் ஏமாற்றப்பட்டவர்கள் ஆகியோர் பிரத்யங்கிரா தேவி கோவிலை தேடி அதிகம் வருவதை பார்க்க முடிகிறது. பிரத்யங்கிரா தேவியிடம் முறையிட்டால் தங்களுக்கான நீதி கிடைக்கும் என்பது இவர்களின் நம்பிக்கை.

# மாதந்தோறும் அன்னாபிஷேகம் நடக்கும் அதிசய சிவன் கோவில்

ஒவ்வொரு மாத பௌர்ணமி அன்றும் சிவலிங்கத்திற்கு ஒவ்வொரு பொருளால் பிரதான அபிஷேகம் செய்யப்படுவது மிகவும் சிறப்பு வாய்ந்ததாக கருதப்படுகிறது. அப்படி, ஐப்பசி மாத பௌர்ணமி நாளில் அன்னத்தால் சிவனுக்கு அபிஷேகம் செய்ய ப்படுவது வழக்கம். அந்த நாளில் குலைவாக வடித்த சாதத்தால் சிவலிங்கத்தை மூடி, உலக உயிர்களுக்கு படியளக்கும் ஈசனுக்கு அதே அன்னத்தால் அபிஷேகம் செய்து பக்தர்கள் நன்றிக்கடன் செலுத்துகிறார்கள். ஒரு அன்னாபிஷேகத்தை தரிசித்தால் கோடி லிங்கங்களை ஒரே நேரத்தில் தரிசிக்க பலன் கிடைக்கும் என்பார்கள்.

பொதுவாக சிவாலயங்களில் ஐப்பசி மாத பௌர்ணமி நாளில் மட்டுமே ஈசனின் லிங்க திருமேனிக்கு அன்னாபிஷேகம் செய்ய ப்படும். இதுவரை நீங்கள் அன்னாபிஷேக தரிசனம் கண்டதில்லை என்றால், அன்னாபிஷேகத்தை தரிசிக்க அடுத்த ஐப்பசி பௌர்ணமி வரும் வரை காத்திருக்க வேண்டும் என நினைக்க வேண்டாம். தமிழகத்தில் உள்ள ஒரு சிவன் கோவிலில் வருடத்திற்கு ஒருமுறை அல்ல, மாதந்தோறும் அமாவாசை நாளில் அன்னாபிஷேகம் நடைபெறுகிறது. அந்த அரிய திருத்தலம் தான், விளமல் பதஞ்சலி மனோகரர் திருக்கோவில். திருவாரூர்





தஞ்சாவூர் சாலையில், திருவாரூரிலிருந்து சுமார் 3 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது இக்கோவில்.

தல புராணமும் பெயர் காரணமும்:

கோயில் முன் உள்ள தீர்த்தம் “அக்னி தீர்த்தம்“ என அழைக்கப்படுகிறது. அமாவாசை நாளில் பக்தர்கள் முதலில் இங்கு நீராடி, பின் சுவாமியை தரிசிக்கிறார்கள். கோபுர வாயிலின் இருபுறமும் விநாயகரும் முருகனும் அருள்பாலிக்கின்றனர். முன் மண்டபத்தில் பதஞ்சலி முனிவரின் திரு உருவம் அமைந்துள்ளது. இந்தத் தலத்தில் பதஞ்சலி மற்றும் வியாக்ரபாதர் இறைவனை வழிபட்டதாக ஐதீகம் கூறுகிறது. பதஞ்சலி முனிவர் தம் உடலைப் பாம்பு வடிவமாகவும், வியாக்ரபாதர் தம் கால்களைப் புலிக்கால் களாகவும் மாற்றி, மணலில் லிங்கம் செய்து வழிபட்டனர். அவர்களின் பக்தியை கண்டு சிவபெருமான் காட்சி தந்து, அஜபா நடனம் ஆடி, தமது திருவடியை காட்டி அருளினார். அந்த திருவடி, ருத்ரபாதம். அதனால் இங்கு அருள்பாலிக்கும் சிவன் பதஞ்சலி மனோகரர் எனப் பெயர் பெற்றார்.

“விளமல்” என்றால் “திருவடி” என பொருள் கொள்ளப்படுகிறது. இறைவன் திருவடி காட்டிய தலம் என்பதால் இப்பெயர் ஏற்பட்டதாக கூறப்படுகிறது. இங்கு சிவன் மண்ணால் ஆன சுயம்பு மூர்த்தியாக கிழக்கு நோக்கி அருள்பாலிக்கிறார். மூலஸ்தானத்தில் முன்புறம் சிவன் திருவடி, நடுவில் லிங்கம், பின்னால் நடராஜர் என ஒரே சன்னிதியில் சிவனின் மூன்று பரிமாணங்களை தரிசிக்க முடியும். தீபாராதனை நேரத்தில், தீப ஒளி லிங்கத்தில் பிரதிபலித்து, லிங்கமே ஜோதி வடிவமாக மிளிரும்.

மாதந்தோறும் அன்னாபிஷேகம் :

ஒவ்வொரு அமாவாசை நாளிலும் இங்கு அன்னாபிஷேகம் நடைபெறுகிறது. வேண்டுதல் நிறைவேறியவர்கள் சாதம் படைத்து இறைவனுக்கு சமர்ப்பிப்பது வழக்கம். முன்னோர்களுக்கு திதி, தர்ப்பணம் செய்ய இயலாதவர்கள் அமாவாசை அன்று இங்கு வந்து அக்னி தீர்த்தத்தில் நீராடி அன்னாபிஷேகம் செய்து, மோட்ச தீபம் ஏற்றி, முன்னோர்கள் மோட்சம் பெற வேண்டி பிரார்த்திக்கின்றனர். இங்கு அமாவாசை விளக்கு ஏற்றி வழிபட்டால் முன்னோர்கள் மகிழ்ச்சி அடைந்து தலைமுறைக்கு ஆசி தருவார்கள் என்பது ஐதீகம்.

நெற்றிக்கண் அம்பாள் :

இத்தல அம்பாள் மதுரபாஷிணி என அழைக்கப்படுகிறார். சிவனுக்கு நெற்றிக்கண் இருப்பதைப் போல, இத்தல அம்மனுக்கு குளிர்ச்சியான நெற்றிக்கண் உள்ளது. 34 வகை நலன்களை அருள்புரியும் தேவியாக இவள் போற்றப்படுகிறார். இதனால் இத்தலம் “வித்யா பீடம்“ எனக் கருதப்படுகிறது. இப்பகுதி மக்கள் குழந்தைகளை பள்ளியில் சேர்ப்பதற்கு முன், அம்மனுக்கு தேன் அபிஷேகம் செய்து அந்த தேனை குழந்தையின் நாவில் தடவி கல்வி மேம்பாடு வேண்டி பிரார்த்திக்கின்றனர். திக்குவாய் பிரச்சனை உள்ள குழந்தைகளும் அம்மனை வேண்டினால் குணமாகும் என்பது பக்தர்களின் நம்பிக்கை.

அபூர்வ தரிசனங்கள்:

தலை திருப்பிய நந்தி, விஷ்ணுவின் தலையில் சிவனின் திருவடி அமைந்த காட்சி, எம சண்டிகேஸ்வரர், இரண்டு ஐராவதங்களுக்கு நடுவில் மகாலட்சுமி, எட்டு கைகள் கொண்ட துர்கை, ராகு கேது தோஷ நிவர்த்திக்குப் புகழ்பெற்றது, சிவன் திருவடி காட்டிய தலம் என்பதால் இங்கு நவகிரக சன்னிதி இல்லை என்பது இக்கோவிலின் தனிச்சிறப்புகள் ஆகும்.

புத்திர பாக்கியம் வேண்டி தசரதன் வழிபட்ட தலங்களில் இதுவும் ஒன்றாக கருதப்படுகிறது. தீராத நோயால் அவதிப்படுபவர்கள், அக்னி தீர்த்தத்தில் நீராடி, அன்னாபிஷேகம் செய்து, சிவபெருமானை வேண்டினால், சிறந்த பலன் கிடைக்கும் என்பது பக்தர்களின் அனுபவம்.

# பிரதோஷ கால பூஜையை முறையாக ஏன் கடைபிடிக்க வேண்டும்?



சிவபெருமானுக்கு உரிய விரதம், வழிபாடுகளில் மிகவும் முக்கியமானதாக கருதப்படுவது பிரதோஷ பூஜையாகும். சந்தியா காலம் என்பது உலக உயிர்கள் அனைத்தும் ஈசனுக்குள் ஒடுங்கும் காலமாக கருதப்படுகிறது. இந்த சமயத்தில் சிவ வழிபாட்டில் மனத்தை ஈடுபடுத்தும் போது, தீய சக்திகளிடம் இருந்தும், எதிர்மறை ஆற்றல்களில் இருந்தும் ஈசன் நம்மை காப்பார் என்பது நம்பிக்கை.

பிரதோஷ பூஜையை ஏன் முறையாக செய்ய வேண்டும், பிரதோஷ பூஜையை சரியாக செய்யவில்லை என்றால் என்னென்ன விளைவுகள் ஏற்படும், பிரதோஷ விரதம் கடைபிடித்தால் என்னென்ன நன்மைகள் கிடைக்கும் என்பதை தெரிந்து கொள்ளலாம்.

பிரதோஷ கால வழிபாடு:

சிவபெருமானை வழிபட பல நேரங்கள் இருப்பினும், பிரதோஷ காலம் என்பது மிகச் சிறப்பானதாகக் கருதப்படுகிறது. பிரதோஷ நேரத்தில் விரதம் இருந்து சிவனை வழிபடுவது பல காலமாக பக்தர்கள் கடைபிடித்து வரும் வழிபாட்டு முறையாகும். இது தேவர்கள், முனிவர்கள் உள்ளிட்டோர் சிவனை வழிபடும் காலமாகும். அந்த சமயத்தில் நாமும் வழிபட்டால் சிவபெருமானின் அருளுடன், முப்பத்து முக்கோடி தேவர்கள், முனிவர்கள் ஆகியோரின் ஆசியும் கிடைக்கும் என்பது நம்பிக்கை. பிரதோஷ காலத்தில் சிவனை பூஜை செய்து வழிபடுவது ஏன் சிறந்ததாக சொல்லப்படுகிறது என்பதற்கு ஒரு ஆன்மீக கதை சொல்லப்படுகிறது.

பிரதோஷ மகிமை சொல்லும் கதை :

ஒரு காலத்தில், கணவனை இழந்த ஒரு ஏழை பெண் தனது சிறிய குழந்தையைத் தூக்கிக் கொண்டு அடர்ந்த காட்டின் வழியாக நடந்து சென்றாள். அந்தக் காட்டில் அச்சமும் இருளும் சூழ்ந்திருந்தன. அவள் மெதுவாக நடந்து கொண்டிருக்கும் போது திடீரென ஒரு குழந்தை அழும் சத்தம் அவள் காதில் விழுந்தது. அவள் அச்சத்துடன் சுற்றிலும் பார்த்தாள். யாரும் இல்லை. “இந்தக் குழந்தையை யார் இங்கு விட்டுச் சென்றார்கள்?” என்று அவள் எண்ணினாள்.”என் குழந்தையை வளர்ப்பதற்கே எனக்கு கஷ்டமாக இருக்கிறது. இந்த நிலையில் இன்னொரு குழந்தையா?” என்று அவள் நினைத்தாள். ஆனால் அந்தக் குழந்தையின் அழுகை அவளது மனதை ஏதோ செய்தது. குழந்தையை அப்படியே விட்டுவிட்டு செல்ல அவளால் முடியவில்லை.

முனிவர் கூறிய உண்மை :

அந்த நேரத்தில் அங்கே ஒரு முனிவர் தோன்றினார். அவர் அந்தப் பெண்ணிடம் கூறினார், “நீ கேட்கும் இந்தக் குழந்தை சாதாரண குழந்தை அல்ல. இவன் ஒரு அரச குமாரன்” என்றார். அவள் அதிர்ச்சியடைந்தாள். முனிவர் தொடர்ந்து கூறினார், விதர்ப்ப நாட்டை ஆண்ட சத்யரதன் என்ற மன்னன் போரில் எதிரி அரசனால் கொல்லப்பட்டான். அந்த மன்னனின் மனைவி தனது குழந்தையை காப்பாற்றிக் கொள்ள காட்டின் வழியாக ஓடினாள். தாகம் தீர்க்க ஆற்றில் இறங்கிய போது ஒரு முதலை அவளை விழுங்கியது. அவள் உயிரிழந்துவிட்டாள். அந்தக் குழந்தை தான் இப்போது அழுது கொண்டிருக்கிறது. முனிவர் மேலும் கூறினார், “இந்தக் குழந்தையை நீ எடுத்துச் சென்று நல்ல முறையில் வளர்த்து வா. இது உன் வாழ்க்கையில் ஒரு தெய்வீக கடமை” என்றார்.

பிரதோஷ பூஜையின் ரகசியம் :

முனிவரின் வார்த்தையை மறுக்க முடியாமல் அந்தப் பெண் அந்தக் குழந்தையையும் தூக்கிக் கொண்டு சென்றாள். பல துன்பங்களையும் கஷ்டங்களையும் கடந்து அந்தப் பெண் ஏகசக்கரபுரம் என்ற ஊரில் குடியேறினாள். அவள் தனது குழந்தையுடன் அந்த அரச குமாரனையும் சமமாக வளர்த்தாள். காலம் கடந்தது. இரு குழந்தைகளும் வளர்ந்து வந்தனர். ஒரு நாள் அந்தப் பெண் சாண்டில்யர் முனிவரை சந்தித்தாள். அவள் முனிவரிடம் கேட்டாள், “ஒரு அரச குமாரனாகப் பிறந்த இக்குழந்தைக்கு ஏன் இவ்வளவு துன்பம் ஏற்பட்டது?” என்றாள். அதற்கு சாண்டில்ய முனிவர் கூறினார், “இந்தக் குழந்தையின் தந்தை முன் பிறவியில் பாண்டிய நாட்டின் மன்னன். ஒரு நாள் போர் திடீரென ஏற்பட்டதால் அவர் செய்து கொண்டிருந்த பிரதோஷ பூஜையை பாதியில் விட்டுவிட்டு போருக்குச் சென்றார். அதனால் சிவ தோஷம் ஏற்பட்டது. அதன் விளைவாக அடுத்த பிறவியில் துர்மரணம் ஏற்பட்டது. பிரதோஷ காலத்தில் சிவபெருமானை முறையாக வழிபட்டால் அனைத்து மங்களங்களும் கிடைக்கும் என்றார். அதோடு அவர் பிரதோஷ விரதம் கடைபிடிக்கும் முறைகளையும் அந்தப் பெண்ணுக்கும் குழந்தைகளுக்கும் சொல்லிக் கொடுத்தார்.

பிரதோஷ விரதத்தின் பலன் :

அந்த நாள் முதல் இரு குழந்தைகளும் பிரதோஷ விரதத்தை முறையாக கடைபிடித்து வந்தனர். ஒரு நாள் அவர்கள் இருவரும் ஆற்றில் நீராடச் சென்றனர். அப்போது அந்தப் பெண்ணின் சொந்தக் குழந்தைக்கு ஒரு புதையல் கிடைத்தது. அவன் அதை தாயிடம் கொண்டு வந்தான். அந்தப் பெண் கூறினாள், “இதை நீங்கள் இருவரும் பகிர்ந்து கொள்ளுங்கள்”. ஆனால் அரச குமாரன் அதை ஏற்க மறுத்தான். சில நாட்கள் கழித்து அந்த அரச குமாரன் காட்டிற்கு சென்றான். அங்கு அவன் ஒரு கந்தர்வ குமாரியை சந்தித்தான். அவளை பார்த்தவுடன் இருவருக்கும் பரஸ்பர அன்பு ஏற்பட்டது. கந்தர்வ குமாரி தனது தந்தையிடம் தனது விருப்பத்தை தெரிவித்தாள்.

சிவபெருமானின் அருள் :

அந்த கந்தர்வராஜன் மகா கைலாசம் சென்று சிவபெருமானை தரிசித்தான். அவர் நடந்ததை எல்லாம் சிவபெருமானிடம் கூறினார். அப்போது பரமேஸ்வரன் கூறினார், “உன் மகளை விரும்புகிறவன் ஒரு பெரிய சிவபக்தன். விதியின் காரணமாக அவன் தனது நாட்டை இழந்து விட்டான். உன் மகளை அவனுக்கு திருமணம் செய்து கொடு. அவன் இழந்த நாட்டையும் மீட்டுக் கொடு”என்றார். சிவபெருமானின் ஆணையை ஏற்று கந்தர்வராஜன் தனது மகளை அந்த அரச குமாரனுக்கு திருமணம் செய்து வைத்தான். மேலும் அவன் இழந்திருந்த ராஜ்யத்தையும் மீட்டுக் கொடுத்தான். அந்த அரச குமாரன் தர்மகுப்தன் என்ற பெயரில் புகழ் பெற்றான். அவன் தனது வளர்ப்பு சகோதரனை மந்திரியாக நியமித்தான். அவனை வளர்த்த தாயிடம் அளவற்ற அன்பு செலுத்தினான். அதன்பின் அவன் நல்ல ஆட்சி செய்ததோடு சிவபூஜையையும் முறையாக செய்து புகழ் பெற்றான்.

பிரதோஷ நேரத்தின் மகிமை :

பொதுவாக மாலை 4.30 மணி முதல் 6 மணி வரை பிரதோஷ காலம் எனப்படுகிறது. இதனை தின பிரதோஷம் என்றும், நித்திய பிரதோஷம் என்றும் அழைப்பார்கள். சிவனை வழிபட சாயரக்ஷை, சோமவாரம், மாத சிவராத்திரி, பிரதோஷம் (அனைத்திலும் சிறந்தது) ஆகியவை சிறந்தவையாகும். அனைத்து தேவர்களையும் தரிசித்த புண்ணியம் பெறுவார்கள். தரித்திரம் நீங்கும், நோய்கள் அகலும், வாழ்க்கையில் தடைகள் நீங்கும் என ஆகமங்கள் கூறுகின்றன.

# தினமும் சொல்ல வேண்டிய சக்தி வாய்ந்த 20 தெய்வ மந்திரங்கள்



தினமும் சொல்ல வேண்டிய மந்திரங்கள் :

1. கணபதி “ஓம் கணபதியே நமஹ”
2. முருகன் “ஓம் சரவண பவ”
3. சிவன் “ஓம் நம சிவாய”
4. விஷ்ணு “ஓம் நமோ நாராயணா”
5. லட்சுமி “ஓம் ஸ்ரீம் மஹாலக்ஷ்மியை நமஹ”
6. சரஸ்வதி “ஓம் ஐம் சரஸ்வத்யை நமஹ”
7. துர்கை “ஓம் தும் துர்காயை நமஹ”
8. மாரியம்மன் “ஓம் மக்தியே மாரியம்மனே நமஹ”
9. காளி “ஓம் க்ரீம் காளிகாயை நமஹ”
10. ஆஞ்சநேயர் “ஓம் ஹனுமதே நமஹ”
11. ஸ்ரீராமர் “ஸ்ரீராம் ஜெய் ராம் ஜெய் ஜெய் ராம்“
12. கிருஷ்ணர் “ஓம் நமோ வாசுதேவாய”
13. ஸ்ரீராகவேந்திரர் “ஓம் ஸ்ரீ ராகவேந்திராய நமஹ”
14. தத்தாத்ரேயர் “ஓம் ஸ்ரீ தத்தாத்ரேயாய நமஹ”
15. ஐயப்பன் “ஸ்வாமியே சரணம் ஐயப்பா”
16. சனி பகவான் “ஓம் சம் சனைச்சராய நமஹ”
17. குரு பகவான் “ஓம் ப்ரிஹஸ்பதயே நமஹ”
18. சூரியன் “ஓம் சூர்யாய நமஹ”
19. சந்திரன் “ஓம் சோம் சோமாய நமஹ”
20. முனீஸ்வரர் “ஓம் மஹா முனீஸ்வராய நமஹ”

# மகாலட்சுமிக்கு தாமரை மலரை பிடிப்பதற்கான தெய்வீக ரகசியம்

மகாலட்சுமி என்றதுமே நம் கண் முன் தோன்றுவது செந்தாமரை மலர் மீது அமர்ந்த நிலையில், கையில் தாமரை பூ ஏந்தி காட்சி தரும் உருவம் தான். அதே போல் மகாலட்சுமிக்கு செய்யப்படும் பூஜையிலும் தாமரை மலருக்கு மிக முக்கியமான இடம் தரப்படுகிறது. தாமரை மலரின் அப்படி என்ன சிறப்பு உள்ளது? தாமரை மலரை ஏன் மகாலட்சுமிக்கு விருப்பமான மலராக சொல்கிறார்கள்? மகாலட்சுமி ஏன் தாமரை மலர் மீது அமர்ந்த படி காட்சி தருவதாக புராணங்கள் போற்றுகின்றன என்பதற்கான காரணங்களை தெரிந்து கொள்ளலாம்.

செல்வத்திற்கு தெய்வமான மகாலட்சுமிக்கு தாமரை மிகவும் விசேஷமானதாக கருதப்படுகிறது. அதே போல் அவள், தாமரை மலரின் மீது வீற்றிருந்து அருள் செய்வதாக புராணங்கள் சொல்கின்றன. மகாலட்சுமிக்கு மற்ற மலர்களை விட தாமரை மீது அப்படி என்ன பிரியம்? வாங்க காரணத்தை தெரிந்து கொள்ளலாம்.

சமுத்திர மந்தனத்தின் போது பாற்கடலில் இருந்து வெளிப்பட்ட தெய்வ அற்புதங்களில் ஒன்றாக மகாலட்சுமி தோன்றினாள் என்று புராணங்கள் கூறுகின்றன. அவள் தோன்றியதும் தங்கத் தாமரையில் அமர்ந்து உலகிற்கு அருள் பொழிந்தாள். அதனால் தான் அவள் பத்மபிரியா, பத்மாலயா, என்று பல பெயர்களால் போற்றப்படுகிறாள். “பத்மம்“ என்றால் தாமரை.

ஏன் தாமரை மலரில் வசிக்கிறார் ?

தாமரை மலரின் இயல்பு, சதுப்பு நீரில் மலர்கிறது. தண்ணீர் சொட்டினாலும் ஒட்டாது, சூரியன் உதித்தால் மலரும். இரவில் தன்னை மூடிக் கொள்கிறது. இவை அனைத்தும் ஒரு வாழ்க்கைப் பாடம். மகாலட்சுமி பணம் மட்டும் அல்ல. நல்ல மனம், ஒழுக்கம், குடும்ப ஒற்றுமை, ஆனந்தம், மன நிம்மதி, ஆரோக்கியம் உள்ளிட்ட செல்வங்களையும் அருளக் கூடியவள். இவை அனைத்தும் சேர்ந்து தான் உண்மையான செல்வம். அழுக்கான சூழலிலும்



வேண்டும் என்பதற்கான அடையாளமே தாமரை.

பூக்களில் சிறந்தது தாமரை என்று ஆகமங்கள் குறிப்பிடுகின்றன. பெருமை, தாமரைக்கும் உண்டு என்று பாரம்பரிய நம்பிக்கை. வெள்ளை தாமரையில் சரஸ்வதி வீற்றிருப்பாள். செந்தாமரையில் மகாலட்சுமி வாசம் செய்கிறாள் என்று நம்பப்படுகிறது. மேலும், தாமரை மலர் திருமாலுக்கு மிகவும் பிரியமான மலராக கருதப்படுகிறது. லட்சுமியின் உருவத்தை விவரிக்கும் போது தாமரை மாலை அணிந்தவள், தாமரை போல் முகம் ஒளிர்பவள், தாமரை கண்கள் கொண்டவள், கையில் தாமரை ஏந்தியவள் அவள் தாமரையோடு இணைந்திருப்பதைக் காட்டுகிறது.

தாமரை மலரின் சிறப்பு :

மகாலட்சுமியை வணங்க ஏற்ற பொருட்கள் தங்கத் தாமரை பூ, சந்தனம், குங்குமம், வெற்றிலை, உலர் பழங்கள், அரிசி, தேங்காய் உள்ளிட்ட பொருட்கள். தாமரை மலரைப் பறித்த பின் ஐந்து நாட்களுக்குள் பூஜையில் பயன்படுத்துவது நல்லது என்பது பாரம்பரிய வழக்கம். தாமரை மலர் பொதுவாக தலையில் சூடப்படுவதில்லை. இது தெய்வ பூஜைக்காகவே அர்ப்பணிக்கப்படும் மலர். எல்லா நாட்களிலும் முடியாவிட்டாலும் வெள்ளிக்கிழமை, ஏகாதசி மகாலட்சுமி படத்திற்கு தாமரை மலர் சமர்ப்பித்து தீபம் ஏற்றி வழிபடுவது மிகவும் சிறப்பானதாக கருதப்படுகிறது. இது செல்வம் பெருகும் என்ற நம்பிக்கையை விட, மனதில் நம்பிக்கை பெருகச் செய்யும் ஆன்மிக ஒழுக்கம். இதற்கு புராணங்களில் கதை ஒன்றும் சொல்லப்படுகிறது.

ஒரு ஏழை விதவை இருந்தாள். அவளிடம் பணமில்லை. ஆனால் வீட்டின் முன் உள்ள குளத்தில் தினமும் மலரும் ஒரு தாமரை மட்டும் இருந்தது. அவள் அந்த தாமரையை பறித்து மகாலட்சுமிக்கு சமர்ப்பித்து, “அம்மா, எனக்கு செல்வம் வேண்டாம். மன அமைதி வேண்டும்“ என்று சென்றது. அவள் மனதில் ஒரு அமைதி பிறந்தது. அவள் வேலை செய்த இடத்தில் நல்ல பெயர் கிடைத்தது. அவளது வாழ்க்கை மெல்ல மெல்ல உயர்ந்தது. அவள் உணர்ந்தாள், செல்வம் வெளியிலிருந்து வரவில்லை; அது உள்ளத்திலிருந்து மலர்ந்தது. தாமரை போல்.

தாமரை மலர் நமக்கு கற்பிப்பது, சூழல் எப்படியிருந்தாலும் சுத்தமாக இரு. கஷ்டத்தில் இருந்தாலும் மலர்ந்திரு. அகந்தை நீங்கிய செல்வத்தை நாடு. மகாலட்சுமி தாயார் தாமரையில் அமர்ந்திருப்பது, செல்வம் சுத்தத்தோடு வர வேண்டும் என்பதற்கான



■ நீலகிரி மாவட்டம் வெலிங்டன் கண்டோண்மென்ட் பகுதிக்கு உட்பட்ட, வெலிங்டன், போகிதெரு ஆகிய பகுதிகளில், புரட்சி தலைவி அம்மா அவர்களின் பிறந்த நாள், மற்றும் முப்பெரும் விழாவினை முன்னிட்டு, அஇஅதிமுக சார்பில், அம்மா பேரவை மாவட்ட செயலாளர், முன்னாள் குன்னூர் சட்டமன்ற உறுப்பினர், சாந்திராமு சிறப்பு பரிசு பெட்டகம்பொது மக்களுக்கு வழங்கினார்.உடன் அஇஅதிமுக நகரிய செயலாளர் துரைராஜ், நடேஷ்குமார் உட்பட கழக நிர்வாகிகள், உறுப்பினர்கள்,மற்றும் பொது மக்கள், கலந்து கொண்டனர்.

# கிருஷ்ணகிரியில் ரூ.9.84 கோடி மதிப்பில் புதிய திட்ட பணிகளைஅமைச்சர் அர.சக்கரபாணி தொடங்கி வைத்தார்

கிருஷ்ணகிரி,மார்ச்.9-

கிருஷ்ணகிரி ஒன்றியம் பெரியமத்தூர் ஊராட்சி நெக்குந்தி கிராமத்தில் ரூ.2.97 கோடி மதிப்பில் 19 சாலை பணிகள், கட்டிகானப்பள்ளி ஊராட்சி தொடக்கப்பள்ளியில் டாடா எலக்ட்ரானிக்ஸ் நிறுவனம் சமூக பொறுப்பு நிதியின் (ஊளுசு) மூலம் ரூ.1 கோடியே 70 லட்சம் மதிப்பில் 10 வகுப்பறை கட்டிட கட்டுமான பணிகள் மற்றும் கிருஷ்ணகிரி ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதிகளில் ரூ.4 கோடியே 96 லட்சத்து 47 ஆயிரம் மதிப்பில் புதிய திட்ட பணிகள் உணவு மற்றும் உணவு வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி பூமி பூஜை செய்து தொடங்கி வைத்தார். மாவட்ட கலெக்டர் ச.தினேஷ் குமார், எம்.எல்.ஏக்கள் மதியழகன், பிரகாஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தொடர்ந்து, ராயக்கோட்டை மேம்பால பகுதியில் தனியார் பள்ளி சமூக பொறுப்பு நிதியின் கீழ் ரூ.20 லட்சம் மதிப்பில் பசுமை பூங்கா, மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில்



பல்வேறு துறைகளின் கீழ் 430 பணிகளுக்கு ரூ.2 கோடியே 13 லட்சத்து 82 ஆயிரத்து 575 மதிப்பில் நலத்திட்ட உதவிகளை அமைச்சர் வழங்கி பேசியதாவது: முதல் - அமைச்சர் மு.க.ஸ்டாலின் அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார். மேலும், பழுதடைந்த சாலைகளை சீரமைத்தும், புதிய தார்சாலை பணிகள் உள்ளிட்ட சாலை மேம்பாட்டு பணிகள் பொதுமக்கள், பள்ளி, கல்லூரி மாணவிகள், விவசாயிகள், வாகன ஓட்டிகள் பயனடையும் வகையில் அமைக்கப்பட்டு வருகிறது. கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், 3,55,693 மகளிருக்கு வழங்கப்பட்டு வருகிறது. கடந்த பிப்ரவரி மாதத்தில் மூன்று மாதங்களுக்கான (பிப்ரவரி, மார்ச், ஏப்ரல்) மகளிர் உரிமைத்தொகை ரூ.3,000 மற்றும் கோடைக்கால சிறப்பு நிதி ரூ.2,000 என மொத்தம் ரூ.5,000 வழங்கப்பட்டது. கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ், ரூ.223 கோடி மதிப்பீட்டில் 7,193 நபர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கான ஆணைகள் வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது. மாவட்டத்தில் 40,407 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.3116.31 கோடி மதிப்பில் சுய உதவிக்குழுக் கடன் வழங்கப்பட்டுள்ளது. மக்களுடன் முதல்வர் திட்டத்தின் கீழ், 41,956 கோரிக்கை மனுக்களுக்கும், உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ், 3,414 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. எனவே, பொதுமக்கள் இதுபோன்ற திட்டங்களை பயன்படுத்திக்கொள்ள வேண்டும், என்றார்.

இந்த நிகழ்ச்சியில், முன்னாள் எம்.எல்.ஏக்கள் செங்குட்டுவன், முருகன், தி.மு.க மாவட்ட அவைத் தலைவர் தட்ரஅள்ளி நாகராஜ், மாநில வர்த்தகரணி துணை செயலாளர் கே.வி.எஸ் சீனிவாசன், அன்பரசு,நகர பொறுப்பாளர்கள் அஸ்லம், வேலுமணி, நகராட்சி ஆணையாளர் சேகர், பேரூராட்சித் தலைவர்கள் சந்தோஷ் குமார் (பர்கூர்), தம்பிதுரை (நாகரசம்பட்டி) உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# "அதிமுகவை காட்டிக் கொடுத்த எட்டப்பர் ஓபிஎஸ்" ஆர்.பி.உதயகுமார் தாக்கு

மதுரை, மார்ச்.9-

"அதிமுகவை காட்டிக் கொடுத்த எட்டப்பர் ஓபிஎஸ்" என அதிமுக முன்னாள் அமைச்சர் ஆர்.பி. உதயகுமார் குற்றம் சாட்டினார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள வீடியோ பதிவில் கூறியிருப்பதாவது: மதுரை மாவட்டம் திருமங்கலம் சட்டப்பேரவைத் தொகுதியில் துரோகத்தின் அடையாளமாக இணைப்பு விழா பொதுக்கூட்டம் நடந்துள்ளது.ஜெயலலிதாவின் பெயரை சொல்லி சம்பாதித்த பணத்தை, அவரை அழிக்க நினைத்தவர்களை வாழ வைக்க செலவழிப்பேன் என, கொஞ்சமும் கூச்சமின்றி தயாராகிவிட்டார் ஓ.பன்னீர்செல்வம்.

ஸ்டாலினை ஜெயலலிதாவுடன் ஒப்பிட்டு பேசுவதற்கு எந்த தார்மீக உரிமையும், தகுதியும் அவருக்கு இல்லை. தனது வாழ்நாளை தமிழக மக்களுக்கு அர்ப்பணிக்க உழைத்து, திமுக சூழ்ச்சி, சூதுகளை முறியடித்து தன்னுயிரை மக்களுக்காக அர்ப்பணித்தவர் ஜெயலலிதா. அவருடன் தமிழக மக்களை ஏமாற்றும் ஸ்டாலினை ஒப்பிட்டு பன்னீர்செல்வம் பேசியது வேதனையின் உச்சம்.

தேர்தலுக்குப் பிறகு அதிமுக பொதுச் செயலாளரை மாற்றி விடுவார்கள் என பச்சை பொய்யை கூறுகிறார் ஸ்டாலின். ஆடு நனைகிறது என்று ஓநாய் அழுவதை போல ஸ்டாலினும், பன்னீர்செல்வமும் கவலைப்படுகின்றனர். அதிமுகவை ஒரு சாமானியர், ஜனநாயக அடையாளமாக பழனிசாமி வழி நடத்துகிறார்.

தேர்தல் பயத்தால் 22 கட்சிகளை கூட்டணியில் சேர்த்துள்ளது திமுக. அதிமுகவில் இருந்து திமுகவுக்கு சென்றவர்கள் கருணாநிதி, ஸ்டாலிடம் பயிற்சி பெறவில்லை. எம்ஜிஆர், ஜெயலலிதாவிடம் பயிற்சி பெற்றவர்கள். இவர்களை அபகரித்து கரையேற்றுகிறேன் என்பது திமுகவின் பலவீனம். தொண்டர்கள் மீது நம்பிக்கை இழந்த ஸ்டாலின் இதுபோல ஆசை வார்த்தை கூறுகிறார் .

அதிமுகவில் காலாவதியான தலைவர்களுக்கு அமைச்சர் பதவி வழங்குவதன் மூலம் திமுகவின் உண்மை தொண்டர்களுக்கு எதிர்காலம் இல்லை என, சூசகமாக அவர் கூறுகிறார். எங்களைப் போன்ற கோடிக்கணக்கான தொண்டர்கள் உயிரை கொடுக்க தயாராக இருக்கிறோம். அதிமுகவில் உண்மையான தொண்டர்கள் இருக்கும் வரை அசைக்க முடியாது. ஜெயலலிதாவை அழிக்க நினைத்தவர்களுக்கு செலவு செய்ய துணிந்த ஓ. பன்னீர்செல்வத்தை பாவம் சும்மா விடாது, தலைமுறைக்கும் தொடரும்.

துரோகத்தை முகமுடியாக கொண்டுள்ள அவர், விசுவாசத்தை பற்றி வேஷம் போடுவதை மக்களும், திமுகவின் தொண்டர்களுமே மன்னிக்க மாட்டார்கள். அதிமுக தொண்டர்கள் ரத்தத்தை உறிஞ்சி, ஜெயலலிதாவை அழிக்க நினைத்தவர்களிடம் அதிமுகவை காட்டி கொடுத்த எட்டப்பர் ஓபிஎஸ். அவர் இருக்கும் இடத்தை விட்டு இல்லாத இடம் தேடி ஞான சூனியமாக உள்ளார். இவ்வாறு அவர் கூறினார்.



# "7 வயது சிறுமிக்கு பாதுகாப்பில்லை; திமுக ஆட்சிக்கு வெற்று விளம்பரம் ஒரு கேடா?" -பழனிசாமி

நாமக்கல், மார்ச்.9-

நாமக்கல் குமாரபாளையத்தில் தெருவில் விளையாடிக் கொண்டிருந்த 7 வயது சிறுமி பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட அதிர்ச்சி செய்தி வந்துள்ளது. 7 வயது சிறுமிக்கு தெருவில் பாதுகாப்பு இல்லாத ஆட்சிக்கு, 'வெல்லும் தமிழ்ப் பெண்கள்' என்ற வெற்று விளம்பரம் ஒரு கேடா?' என அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார். இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'நாமக்கல் மாவட்டம், குமாரபாளையத்தில் தெருவில் விளையாடிக் கொண்டிருந்த 7 வயது சிறுமி பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு, உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்க பட்டுள்ளதாக, உலக மகளிர் தினம் ஆன இன்று, அதிர்ச்சி அளிக்கும் செய்தி வந்துள்ளது.

ஸ்டாலின் அரசின் ஒட்டுமொத்த நிர்வாகச் சீர்கேட்டால், சிறுமி முதல் மூதாட்டி வரை யாருக்கும் எங்கும் பாதுகாப்பு இல்லை. இப்படி ஒரு கேவலமான ஆட்சிக்கு பொறுப்பான நீங்கள், எந்த முகத்தை வைத்துக் கொண்டு மக்களிடம் இன்னொரு முறை ஆட்சி செய்ய கேட்கிறீர்கள் மு.க.ஸ்டாலின் அவர்களே?

ஒரு 7 வயது சிறுமிக்கு தெருவில் பாதுகாப்பு இல்லாத ஆட்சிக்கு, "வெல்லும் தமிழ்ப் பெண்கள்" என்ற வெற்று விளம்பரம் ஒரு கேடா?. குமாரபாளையம் சிறுமி பாலியல் வன்கொடுமை வழக்கில் குற்றவாளி மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கவும், அப்பச்சிளம் குழந்தைக்கு முறையான சிகிச்சை அளிக்கவும், ஸ்டாலின் மாடல் திமுக அரசை வலியுறுத்துகிறேன்' எனத் தெரிவித்தார்.

# திருவையாறு சுகாதார நிலையத்தில் 14 வயதுடைய குழந்தைகளுக்கு ஹெச்பிவி தடுப்பூசி போடும் முகாம்

தஞ்சாவூர் மார்ச். 9-

ஆரம்ப சுகாதார நிலைய வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர் பிரதீப்ராஜ் தலைமை வகித்தார். டாக்டர் சுவேதா, செவிலியர் கவிதா மற்றும் கிராம செவிலியர்கள் உள்ளிட்ட மருத்துவ குழுவினர் திருவையாறு வட்டாரத்தில் உள்ள 14 வயதுடைய பெண் குழந்தைகளுக்கும் குறிப்பாக பள்ளிகளில் 9 ம் வகுப்பு படித்து வரும் மாணவிகளுக்கு கர்ப்பபை புற்றுநோய் வராமல் தடுக்கும் ஹெச்பிவி தடுப்பூசி போடும் பணி மேற்கொண்டு 16 பெண் குழந்தைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது திருவையாறு வட்டாரத்தில் 14 வயது பெண் குழந்தைகள் 480 பேருக்கு தடுப்பூசி போடுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முகாமில் திருவையாறு வட்டார பகுதிகளில் உள்ள பள்ளிகளில் படித்து வரும் 9 ம் வகுப்பு மாணவிகள், சுகாதார செவிலியர்கள், கிராம செவிலியர்கள் மற்றும் மருத்துவ அலுவலர்கள் கலந்து கொண்டனர். ஹெச்பிவி தடுப்பூசி மனித பாப்பிலோமா வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாக்கும் ஒரு தடுப்பூசி ஆகும். இது முக்கியமாகப் பெண்களுக்குக்கான கர்ப்பப்பை வாய் புற்றுநோய் மற்றும் பிற புற்றுநோய்களைத் தூண்டும் வைரஸ்களைத் தடுக்கிறது . என்பது குறிப்பிடத்தக்கது.

# பரங்கிமலை ராணுவ அதிகாரிகள் பயிற்சி மையத்தில் 156 பேருக்கு ராணுவப் பயிற்சி நிறைவு

பரங்கிமலை, மார்ச்.9-

ராணுவ அதிகாரிகள் பயிற்சி மையத்தில் 156 பேருக்கு பயிற்சி நிறைவு பெற்றது. இதில் சிறப்பாக செயல்பட்டவர்களுக்கு வீரவாள், பதக்கங்கள் வழங்கப்பட்டன.

பரங்கிமலையில் ராணுவ அதிகாரிகள் பயிற்சி மையம் செயல்பட்டு வருகிறது. இங்கு ராணுவப் பணியில் சேரும் அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இந்த பயிற்சி மையத்தில் இந்திய நாட்டைச் சேர்ந்த இளம் அதிகாரிகள் மட்டுமின்றி நட்பு நாடுகளைச் சேர்ந்த அதிகாரிகளுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இந்த மையத்தில், 11 மாத பயிற்சி பெற்ற 121 ஆண், 35 பெண் ஆகிய 156 பேருக்கு பயிற்சி நிறைவு விழா. அணி வகுப்பு விழா நேற்று ஓடிஏ வளாகத்தில் பரமேஸ்வர் திடலில் நடந்தது. இந்த நிகழ்ச்சிகளில் மேற்கு கட்டளைப் பிரிவின் தலைமைத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மனோஜ் குமார் கட்டி யார், ராணுவ பயிற்சி மையத்தின் தலைவர் லெப்டினன்ட் ஜெனரல் மைக்கேல் ஏ.ஜே பெர்னாண் டஸ் பங்கேற்று பயிற்சி நிறைவு செய்த ராணுவ அதிகாரிகளின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டனர்.

பின்னர் சிறப்பு அணி வகுப்பு நடத்திய அணிகளுக்கு தங்கம். வெண்கல பதக்கம், சிறப்பு வாள் போன்றவற்றை வழங்கினர். இதையடுத்து பயிற்சி முடித்த அதிகாரிகள் பொறுப்பேற்கும் நிகழ்ச்சி நடந்தது. இதில் ராணுவ அதிகாரிகள். அவர்களின் குடும்பத்தினர் பங்கேற்றனர்.

இந்த நிகழ்ச்சியின்போது இளம் ராணுவ அதிகாரிகளின் தோள்பட்டையில் மூடி வைக்கப்பட்டிருந்த நட்சத்திர சின்னத்தை, அவர்களது பெற்றோர் திறந்து வைத்து, அவர்களை நாட்டுக்கு அர்ப்பணித்தனர். பின்னர் ஒவ்வொரு அணியாக பிரிந்து தரையில் படுத்து தாய் மண்ணை முத்தமிட்டனர். பயிற்சி முடித்த அனைவரும் சில நாட்களில் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதிகளில் பணியில் சேர உள்ளனர். 49 வாரங்கள் இணைந்து பயிற்சி பெற்றவர்கள் பிரிந்து வெவ்வேறு இடங்களுக்கு செல்ல உள்ளதால், பிரியா விடை பெற்றுக்கொண்டனர். வெளிநாடுகளைச் சேர்ந்த (பூட்டான், தான் சானியா) 2 ஆண் மற்றும் 2 பெண் அதிகாரிகள் தங்கள் பயிற்சியை வெற்றிகரமாக முடித்தனர்.





# தொடரும் காவல் மரணங்கள் : பொதுமக்கள் போராட்டம்

சிவகங்கை, மார்ச்.9-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை கிருஷ்ணராஜபுரத்தைச் சார்ந்த ராஜேஷ் கண்ணன் என்பவரது மகன் ஆகாஷ் டெல்சன் என்ற தேவேந்திர குல வேளாளர் சமூக இளைஞர் நேற்றைய தினம் மானாமதுரை காவல் நிலைய அதிகாரிகளால் அழைத்துச் செல்லப்பட்டு விசாரணை என்ற பெயரிலே அடித்து துன்புறுத்தி படுகொலை செய்யப்பட்டிருக்கிறார் . தமிழகத்தில் இது போன்று தொடர் காவல் மரணங்கள் நடந்தேறி வருகிறது. இதில் குறிப்பாக எண்ணற்ற பட்டியலின , பிற்படுத்தப்பட்ட இளைஞர்களை மீது விசாரணை என்ற பெயரில் பொய் வழக்குகள் புனைவதும் கை, கால்களை ஊனப்படுத்துவதும் காவல் நிலைய மரணங்கள் ஏற்படுத்துவதும் தமிழக காவல்துறைக்கு வாடிக்கையாக போய்விட்டது . சமீபத்தில் மானாமதுரை கோட்டம். திருப்புவனம்மடப்புரத்தில் அஜித்குமார் என்பவர் காவல்துறையினர் அடித்து படுகொலை செய்தார்கள். பொதுநல ஆர்வலர்கள் காவல்துறையின் மனித உரிமை மீறலுக்கு எதிராக வழக்குகள் தொடுத்தும் போராட்டங்கள் நடத்தியும் கூட இதுபோன்ற காவல் நிலைய சித்திரவதைகளை தடுக்க முடியவில்லை. ஆகாஷ் டெல்சன் படுகொலையை வன்மையாக கண்டிப்பதோடு தமிழக அரசு உடனடியாக மானாமதுரை காவல் நிலைய அதிகாரிகள் மீது கொலை வழக்கு பதிவு செய்து சட்டபடியான நடவடிக்கை எடுத்து அவர்களை நிரந்தர பணி நீக்கம் செய்ய வலியுறுத்தி இன்று 8.3.2024 ஆம் தேதி மதுரை இராமேஸ்வரம் நெடுஞ் சாலை மானாமதுரையில் காலையிலிருந்து மறியல் போராட்டம் நடைபெறுகிறது. விடுதலைச்சிறுத்தைகள் கட்சி பொறுப்பாளர்கள் மானாமதுரை தொகுதி மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் பாலையா. மாவட்ட செய்திதொடர்பாளர் ஆதிவளவன். மானாமதுரை(மே) ஒன்றிய செயலாளர் கிருஷ்ணமூர்த்தி. பாராதிராஜன் உள்ளிட்ட நிர்வாகிகள் மறியல் போராட்டத்தில் கலந்து கொண்டு கண்டனத்தை பதிவு செய்தோம்... விரைவில் ஆகஷ்டெல்சன் படுகொலையை கண்டித்து விடுதலைச்சிறுத்தைகள் கட்சியின் சார்பாக கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.-





■ செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் சட்டமன்ற தொகுதி 4வது மண்டலம் பெருங்களத்தூர் வடக்கு பகுதி 53வது வார்டு தாம்பரம் மாநகர செயலாளர், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா அவர்கள் ரூ.24.50 இலட்சம் மதிப்பீட்டில் முடிச்சூர் சாலை காந்தி சாலை சந்திப்பில் ரவுண்டானா சாலையினை அழகு படுத்தும் வகையில் பூச்செடிகள் வண்ண விளக்குகள் பாரம்பரியமான ஜல்லிக்கட்டு மாடு அடக்கும் வீரர் சிலையையும் திறந்து வைத்தார் இந்நிகழ்வில் தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, தாம்பரம் மாநகராட்சி ஆணையர் சீ.பாலசந்தர், 4வது மண்டல குழு தலைவர் பெருங்களத்தூர் வடக்கு பகுதி செயலாளர் டி.காமராஜ், 5வது மண்டல குழுத்தலைவர், தாம்பரம் மேற்கு பகுதி செயலாளர் எஸ்.இந்திரன், மாமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.கோபி, ரமணி ஆதிமூலம், சி.சுரேஷ், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், அணிகளின் நிர்வாகிகள், மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161